கலைஞர் 100


தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சீர்மிகு சட்டப்பள்ளி

எம்.ஜி.ஆர், சாலை, பெருங்குடி, சென்னை - 600 113

தொலைபேசி எண்: 044-22439161




பேராசிரியர் (முனைவர்) வே. பாலாஜி, எம்.எல், பி.எச்,டி.,

மன்

எண்:31/சீசப/இ.ப./எஸ்1/2023

15.11.2023

## சுற்றறிக்கை

பொருள் : தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் - சீர்மிகு சட்டப்பள்ளி - கல்வியாண்டு 2023-2024 - தமிழ் நாடு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி மாநில முழுவதும் அமையப் பெற்றுள்ள சட்டக் கல்லூரிகளுக்கிடையேயான பேச்சுப் போட்டி 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சட்டப் பல்கலைக்கழகப் பெருங்குடி வளாகத்தில் நடைபெறவுள்ளது - அப்போட்டியில் சீர்மிகு சட்டப்பள்ளி மாணாக்கர்கள் பங்கேற்பது குறித்து - தெரிவித்தல்.

பார்வை: முனைவர் டி. ஜெய்சங்கர், இணைப்பேராசிரியர் மற்றும்இயக்குநர், மாணவர்கள் நலன், சீர்மிகு சட்டப்பள்ளி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித நாள் 15.11.2023.

******

பார்வையில் கண்ட கடிதத்தினைத் தொடர்ந்து, தமிழ் நாடு அரசு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி மாநில முழுவதும் அமையப் பெற்றுள்ள சட்டக் கல்லூரிகளுக்கிடையேயான பேச்சுப் போட்டிகள் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) தமிழ் நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகப் பெருங்குடி வளாகத்தில் நடைபெறுவதால், சீர்மிகு சட்டப்பள்ளி, ஐந்தாண்டு ஒருங்கிணைந்த (ஹானர்ஸ்) மற்றும் மூன்றாண்டு எல்.எல்.பி. (ஹானர்ஸ்) சட்டப்படிப்புகள் பயிலும் மாணாக்கர்கள் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பேச்சுப் போட்டி தமிழில் மட்டுமே நடத்தப்படும். மேற்குறிப்பிட்ட தலைப்பினைச் சார்ந்தே போட்டியாளர்கள் **ஐந்து** நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிட வேண்டும். போட்டியாளர்களுக்கான பரிசு விவரம் கீழ்வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் பரிசு | : | ரூ.50,000/- | : | தங்கப்பதக்கம், சான்றிதழ் |
| இரண்டாம் பரிசு | : | ரூ.25,000/- | : | வெள்ளிப்பதக்கம், சான்றிதழ் |
| மூன்றாம் பரிசு | : | ரூ.15,000/- | : | தாமிரப்பதக்கம், சான்றிதழ் |
| இரண்டு ஆறுதல் பரிசு | : | ரூ. 5,000/- | : | வெண்கலப்பதக்கம், சான்றிதழ் |

பேச்சுப் போட்டியில் பங்கேற்க விருப்பமுள்ள மாணாக்கர்கள் அவர்தம் பெயர் மற்றும் இதர விவரங்கள் குறித்து **முனைவர்.டி.ஜெய்சங்கர்**, இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர், மாணவர் நலன், சீர்மிகு சட்டப்பள்ளி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை, அவர்களிடம் **17.11.2023 அன்று மாலை 5.00 மணிக்குள்** வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மன் 15/11/23

பெறுநர்
1. இளங்கலை படிப்பு, ஐந்தாண்டு ஒருங்கிணைந்த (ஹானர்ஸ்) மற்றும் மூன்றாண்டு எல்.எல்.பி. (ஹானர்ஸ்) சட்டப்படிப்புகள் அனைத்து மாணாக்கர்கள், சீர்மிகு சட்டப்பள்ளி, தநாடாஅசப.
2. அறிவிப்பு பலகை.

நகல்:
1. மாண்புமிகு துணைவேந்தர் அவர்களின் கனிவான பார்வைக்காக தனிச்செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பதிவாளர், தநாடாஅசப., சென்னை.
3. நூலகர், தநாடாஅசப, பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய:www.tndalu.ac.in
4. முனைவர்.டி.ஜெய்சங்கர், இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர், மாணவர் நலன், சீர்மிகு சட்டப்பள்ளி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை,
5. இளங்கலை படிப்பு அனைத்து இயக்குநர்கள், சீர்மிகு சட்டப்பள்ளி, தநாடாஅசப., சென்னை.
6. கல்வியியல் ஆலோசகர், சீர்மிகு சட்டப்பள்ளி, தநாடாஅசப., சென்னை.